75 YEARS
STABILITY FOR PROSPERITY
1950-2025

# 2025ஆம் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வில்

## பிரதிபலிக்கப்பட்டவாறான

# பொருளாதார நிலைமை


இலங்கை மத்திய வங்கி



**நா. ஜனகன்**
சிரேஷ்ட பொருளியலாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2026 மே 19

# 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 80(3)ஆம் பிரிவு





“மத்திய வங்கியானது ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னரான **நான்கு மாத காலப்பகுதியினுள், அதன் கொள்கைக் குறிக்கோள்கள் மற்றும் நிதியியல் முறைமையின் நிலைமை என்பவற்றினை வலியுறுத்தி,** அத்தகைய நிதியாண்டுக் காலப்பகுதியில் **பொருளாதாரத்தின் நிலைமை பற்றி** ஆளும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட **அறிக்கையொன்றினை வெளியிட்டு, அமைச்சரினூடாகப் பாராளுமன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிப்பதனை** மத்திய வங்கியின் ஆளுநர் நிச்சயப்படுத்தல் வேண்டும். அத்தகைய நிதியாண்டுக் காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட **மத்திய வங்கியின் கொள்கைகளின் மீளாய்வொன்றினையும் மதிப்பீடொன்றினையும்** அறிக்கை உள்ளடக்குதல் வேண்டும்”

# 2025ஆம் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வின் உள்ளடக்கம்

1. முக்கியப் பொருளாதாரக் குறிகாட்டிகள் மற்றும் முக்கிய சமூகக் குறிகாட்டிகள்
2. சுருக்க அறிக்கை
3. நிழற்படங்கள்
4. அத்தியாயங்கள்
   - அத்தியாயம் 1: பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள்
   - அத்தியாயம் 2: நிதியியல் முறைமையின் நிலைமை
   - அத்தியாயம் 3: மத்திய வங்கிக் கொள்கைகளின் மீளாய்வு
   - அத்தியாயம் 4: பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு
5. 11 சிறப்பு வரைபடங்கள்
6. 5 சிறப்புக் குறிப்புக்கள்
7. இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்
8. புள்ளிவிபரப் பின்னிணைப்பு *(21 அட்டவணைகள்)*
9. சிறப்புப் புள்ளிவிபரப் பின்னிணைப்பு *(9 அட்டவணைகள்)*

**புள்ளிவிபரப் பிற்சேர்க்கைகள் (145 அட்டவணைகள்) மற்றும் சிறப்புப் புள்ளிவிபரப் பிற்சேர்க்கைகள் (9 அட்டவணைகள்) என்பன பற்றிய விரிவான பதிப்புக்கள் எக்ஸெல் வடிவில் இணையவழியில் கிடைக்கப்பெறுகின்றன.*



உயர்வடைகின்ற வர்த்தகத் தீர்வைகள், புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் டித்வா புயலின் தாக்கம் என்பவற்றிலிருந்தான சவால்களிற்கு மத்தியில், 2025இல் இலங்கைப் பொருளாதாரமானது முன்னைய ஆண்டுகளில் அடையப்பட்ட மீட்சியினைத் தொடர்ந்து கட்டியெழுப்பியது

# சுருக்க அறிக்கை

**உண்மைத் துறை மற்றும் பணவீக்கம்:** மேம்பட்ட உள்நாட்டு நடவடிக்கைகளுடன் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2025இல் 5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, தொடர்ச்சியாக இரண்டு ஆண்டு கால விரிவாக்கமொன்றினைக் குறித்துக்காட்டியது. தளர்வடைகின்ற வலு விலை வீழ்ச்சிகள் மற்றும் அதிகரித்துச் செல்கின்ற உணவு விலைகள் என்பவற்றினால் உந்தப்பட்டு, பணவீக்கமானது பணச்சுருக்கக் கட்டமொன்றின் பின்னர் 2025 ஓகத்திலிருந்து நேர்க்கணியமாகத் திரும்பலடைந்தது.

**நாணயத் துறை:** நாணயக் கொள்கையானது தொடர்ந்தும் தளர்வடைந்து காணப்பட்டு, தாழ்ந்தளவிலான வட்டி வீதங்கள் மற்றும் தனியார் துறைக் கொடுகடனில் குறிப்பிடத்தக்களவிலான விரிவாக்கம் என்பவற்றிற்கு ஆதரவளித்தது.

**வெளிநாட்டுத் துறை:** வலுவான பணவனுப்பல்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, நடைமுறைக் கணக்கானது தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக மிகையொன்றினைப் பதிவுசெய்தது. வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் ஒதுக்குத் திரட்சியினை இயலச்செய்த வேளையில் ரூபாவானது நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத வீச்சொன்றின் கீழ் மிதமாகப் பெறுமதித்தேய்வடைந்தது.

**நிதியியல் துறை:** வலுவான மூலதன மற்றும் திரவத்தன்மைத் தாங்கியிருப்புக்கள் ஒட்டுமொத்த முறைமைத் தாக்குப்பிடிக்குந்தன்மையினை மேம்படுத்தியதுடன் நிதியியல் துறைச் செயலாற்றமானது மேம்பட்டது.

**இறைத் துறை:** அரசிறையின் அடிப்படையிலமைந்த திரட்சியினால் உந்தப்பட்டு, தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகப் பதிவுசெய்யப்பட்ட முதலாந்தர மிகையொன்றுடன் இறைச் செயலாற்றமானது தொடர்ந்தும் வலுவடைந்து காணப்பட்டது. பாதிப்படையக்கூடிய குழுக்களிற்கு ஆதரவளிக்கின்ற வேளையில் இறை ஒழுக்கவியலினைப் பேணுவதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

**தோற்றப்பாடு:** தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கை இசைவாந்தன்மை என்பன பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கும் தாங்கியிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கும் துணைபுரிகின்றன. இருப்பினும், பணவீக்கம், வெளிநாட்டு நிலைமைகள் மற்றும் ஒட்டுமொத்த உறுதிப்பாடு என்பவற்றினைப் பாதிக்கின்ற விதத்தில் மத்திய கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்ற யுத்தத்திலிருந்தான இடர்நேர்வுகளுடன் 2026ஆம் ஆண்டானது மிகவும் சவால்மிக்கதாயமையக்கூடுமெனப் புலப்படுகின்றது.

# 2025ஆம் ஆண்டிற்கான இலங்கைப் பொருளாதாரத்தின் நிழற்படம்

**இலங்கைப் பொருளாதாரமானது பல்வேறு அதிர்வுகளிற்கு மத்தியில் பொருளாதார மீட்சியினைத் தொடர்ந்தும் கட்டியெழுப்பியது**

## உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி

வளர்ச்சி உத்வேகம் நிலைத்திருந்தது

| 2024 (ஆண்டிற்காண்டு) | 2025 (ஆண்டிற்காண்டு) |
|---|---|
| 5.0% | 5.0% |

வேளாண்மை 1.4% | கைத்தொழில் 7.8% | பணிகள் 3.3%

## பெயரளவிலான மொ.உ.உற்பத்தி

| 2024 | 2025 |
|---|---|
| ரூ. 30.1 ரில் | ரூ. 32.8 ரில் |
| ஐ.அ.டொ. 99.6 பில் | ஐ.அ.டொ. 108.8 பில் |


வளர்ச்சி: 2025 இல் 8.8% (ரூபா நியதிகளில்)

## தலைக்குரிய மொ.உ.உற்பத்தி

ஐ.அ.டொ. 5,003 (2025)

ஐ.அ.டொ. 4,546 (2024)

## முதன்மைப் பணவீக்கம் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு)




## நாணயக் கொள்கை நிலைப்பாடு

| | 2024 இறுதியில் | 2025 இறுதியில் |
|---|---|---|
| ஓரிரவு கொள்கை வீதம் | 8.00% | 7.75% |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.50% | 7.25% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.50% | 8.25% |

நாணயக் கொள்கை தொடர்ந்தும் தளர்த்தப்பட்டு காணப்பட்டது

## சந்தை வட்டி வீதங்கள் (%)

| | 2024 இறுதியில் | 2025 இறுதியில் |
|---|---|---|
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம் (மாதாந்தம்) | 8.92 | 8.87 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 11.93 | 11.48 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 10.77 | 10.69 |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 7.53 | 6.78 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 6.52 | 6.29 |
| 1 ஆண்டு திறைசேரி உண்டியல் விளைவு | 8.96 | 8.45 |

## நிதியியல் துறை

| மொத்த கட்டம் 3 கடன்கள் விகிதம் | 2024 | 2025 |
|---|---|---|
| வங்கித்தொழில் துறை | 12.3% | 9.7% |
| நிதிக் கம்பனிகள் துறை | 11.5% | 6.1% |
| **மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்** | | |
| வங்கித்தொழில் துறை | 20.3% | 17.9% |
| நிதிக் கம்பனிகள் துறை | 21.3% | 18.7% |

## தனியார் துறைக்கான கொடுகடன் (உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால்)

| | கொடுகடன் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு) | கொடுகடன் விரிவாக்கம் |
|---|---|---|
| 2025 | 25.2% | ரூ. 2,056 பில் |
| 2024 | 10.7% | ரூ. 790 பில் |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம்

**வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது**

ஐ.அ.டொ 6.1 பில் (2024 இல்) → ஐ.அ.டொ 7.9 பில் (2025 இல்)

இறக்குமதி வளர்ச்சி > ஏற்றுமதி வளர்ச்சி

**சுற்றுலாப் பயணிகளின் வருகை வலுவடைந்து காணப்பட்டது**

2.05 மில் (2024 இல்) → 2.36 மில் (2025 இல்)

சாதகமான உத்வேகம் தொடர்ந்தது

**தொழிலாளர் பணவனுப்பல்கள்* மேம்பட்டன**

ஐ.அ.டொ 6.6 பில் (2024 இல்) → ஐ.அ.டொ 8.1 பில் (2025 இல்)

பணவனுப்பல்கள் பாரியளவில் அதிகரித்தன

* டித்வா புயலினைத் தொடர்ந்து கிடைக்கப்பெற்ற நிதியியல் உதவி போன்ற ஏனைய பணவனுப்பல்களை இது உள்ளடக்கலாம்.

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்**

| | |
|---|---|
| 2025 இறுதி | ஐ.அ.டொ 6.8 பில் |
| 2024 இறுதி | ஐ.அ.டொ 6.1 பில் |

வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளுக்கு மத்தியில் மேம்பட்டது

**செலாவணி வீதம் (ரூ. / ஐ.அ.டொலர்)**

| | |
|---|---|
| 2025 இறுதி | 309.99 |
| 2024 இறுதி | 292.58 |

- 5.6% 2025இல் பெறுமதித்தேய்மானம்

+10.7% 2024இல் பெறுமதியுயர்வு

ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தது

**மத்திய வங்கியின் தேறிய அந்நியச் செலாவணிக் கொள்வனவுகள்** (பெறுமதித் திகதி அடிப்படையிலமைந்தது)

ஐ.அ.டொ 2.0 பில் (2025 இல்)

ஐ.அ.டொ 2.8 பில் (2024 இல்)

தேறிய அந்நியச் செலாவணிக் கொள்வனவுகள் தொடர்ந்தன

**நடைமுறைக் கணக்கு மிகை மேம்பட்டது**

2024 இல் ஐ.அ.டொ 1.2 பில் → 2025 இல் ஐ.அ.டொ 1.7 பில்

## இறைத் துறை

| | அரசிறை (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | முதலாந்தர மிகை (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) |
|---|---|---|---|
| 2025 | 16.7 | 2.3 | 5.4 |
| 2024 | 13.6 | 6.8 | 2.2 |

**வெளிநின்ற மத்திய அரசின் படுகடன்****

மொ.உ.உற்பத்தியின் 95.5 சதவீதமாக (2024 இறுதி)

மொ.உ.உற்பத்தியின் 91.6 சதவீதமாக (2025 இறுதி)


** ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2025இன் அட்டவணை 1.21இலுள்ள குறிப்புக்களை பார்க்கவும்

**உறுதிப்பாடு மீட்கப்பட்டது | கொடுகடன் தரமிடல்கள் மேம்பட்டன | சாதகமான பொருளாதார உத்வேகம் தொடர்ந்தது**

# பணவீக்கம் மற்றும் விலை அபிவிருத்திகள்

# தொடர்ச்சியான பதினொரு மாதகால பணச்சுருக்கத்தினைத் தொடர்ந்து, முதன்மைப் பணவீக்கமானது 2025 ஓகத்தில் நேர்க்கணிய வீச்சிற்குத் திரும்பலடைந்ததுடன் அதன்பின்னர் படிப்படியாகத் துரிதமடைந்தது

கொ.நு.வி. சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (2021=100, ஆண்டிற்காண்டு)





*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் கணிப்புக்கள்

- மின்சாரக் கட்டணங்களிற்கான கீழ்நோக்கிய திருத்தங்கள் மற்றும் புள்ளிவிபரத் தளத் தாக்கங்கள் என்பவற்றினால் உந்தப்பட்டு, **பணச்சுருக்க நிலைமைகள் 2025இன் முற்பகுதியில் ஆழமடைந்தன**
- இருப்பினும், அதிகரித்து வருகின்ற உணவுப் பணவீக்கம் மற்றும் மின்சாரக் கட்டணங்களிற்கான மேல்நோக்கிய சீராக்கம் என்பன காரணமாக **2025 மாச்சிலிருந்து பணச்சுருக்கமானது தளர்வடையத் தொடங்கியது**
- அதிகரித்து வருகின்ற உணவுப் பணவீக்கம் மற்றும் இயல்புநிலைக்குத்திரும்புகின்ற கேள்வி நிலைமைகள் என்பவற்றுடன் இணைந்து வலு மற்றும் போக்குவரத்து வகையில் ஏற்பட்ட பணச்சுருக்க அழுத்தங்கள் தளர்வடைந்தமையினால் **பணவீக்கமானது 2025 ஓகத்தில் நேர்க்கணிய வீச்சிற்குத் திரும்பலடைந்ததுடன் அதன்பின்னர் படிப்படியாகத் துரிதமடைந்தது**

| கொ.நு.வி.சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கம் (2021=100) | | |
|---|---|---|
| ஆண்டு | ஆண்டின் இறுதி (ஆண்டிற்காண்டு) | ஆண்டுச் சராசரி |
| 2023 | 4.0% | 17.4% |
| 2024 | -1.7% | 1.2% |
| 2025 | 2.1% | -0.5% |


# கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, வாழ்க்கைச் செலவானது 2024உடன் ஒப்பிடுகையில் 2025இல் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது




- **கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்** அடிப்படையிலமைந்த **வீட்டலகொன்றிற்கான** மதிப்பிடப்பட்ட சராசரி **மாதாந்த நுகர்வுச் செலவினமானது** 2024இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.178,438 இலிருந்து 2025இல் ரூ.177,545 இற்கு 0.5 சதவீதத்தினால் **சிறிதளவு குறைவடைந்தது**

# மையப் பணவீக்கமானது 2025 காலப்பகுதியில் படிப்படியான துரிதமடைதலொன்றினைக் காட்டிய வேளையில் தாழ்ந்தளவிலான நேர்க்கணிய மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டது

முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள்
(கொ.நு.வி. சுட்டெண், 2021=100, ஆண்டிற்காண்டு)




- மையக் கூடையினுள் உணவு மற்றும் தெரிவுசெய்யப்பட்ட உணவல்லா வகைகளினால் உந்தப்பட்டு, **படிப்படியான மேல்நோக்கிய போக்கொன்று** காணப்பட்ட போதிலும், மையப் பணவீக்கமானது 2025ஆம் ஆண்டு முழுவதும் **தாழ்ந்தளவிலான நேர்க்கணிய மட்டங்களில்** தொடர்ந்தும் காணப்பட்டது


- ஏனைய பொருளாதாரக் குறிகாட்டிகளினால் குறித்துக்காட்டப்பட்டதிலும் பார்க்க, கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பானது ஓரளவு மெதுவடைந்திருக்கலாம் என்பதனை இது எடுத்துக்காட்டுகின்றது

- 2026இன் முற்பகுதியில் ஏற்பட்ட அபிவிருத்திகளும் மையப் பணவீக்கமானது தாழ்ந்தளவிலான நேர்க்கணிய மட்டங்களில் தொடர்ந்தும் காணப்படுவதனைக் காட்டுவதானது **உள்நாட்டுக் கேள்வி நிலைமைகளில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மெதுவான மீட்சியினைக்** குறித்துக்காட்டுகின்றது

## சிறப்பு வரைபடம்

# பணிகள் மற்றும் பணிகள் அல்லாதவற்றின் பணவீக்க இயக்கவாற்றல்கள்

### பணிகள், பணிகளல்லா மற்றும் முதன்மை பணவீக்க அசைவுகள் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு)





- பணிகள் பணவீக்கமானது ஏனையவற்றிற்கிடையில் **வீட்டு வாடகை, உணவகங்கள் மற்றும் விடுதிப் பணிகள், கல்வி, தொடர்பூட்டல் மற்றும் போக்குவரத்துப் பணிகள் போன்ற பணிகளின் விலைகளில் காலப்போக்கில் ஏற்படுகின்ற அதிகரிப்பினைக்** குறிக்கின்றது.
- பொருட்களின் விலைகளுடன் ஒப்பிடுகையில், **பணிகளின் விலைகள் குறைந்தளவிலான தளம்பலினைக் கொண்டிருப்பதுடன் நிரம்பல்-பக்க இடையூறுகள் அல்லது வெளிவாரி அதிர்வுகளிற்குப் படிப்படியாக சீராகுவதுடன்** அதன்மூலம், பாரியளவிலான நீடித்ததன்மையை வெளிப்படுத்துகின்றன.
- ஆதலால், பணிகள் பணவீக்கமானது அடிப்படைப் பணவீக்க அழுத்தங்களின் முக்கிய குறிகாட்டியொன்றாகத் தொழிற்படுகின்றது
- முதன்மைப் பணச்சுருக்க நிகழ்வின் போது **பணிகளல்லா பணச்சுருக்கமானது குறிப்பிடத்தக்களவு ஆழமடைந்த** போதிலும், **பணிகள் பணவீக்கமானது நேர்க்கணியமாகத் தொடர்ந்தும் காணப்பட்டு,** ஒட்டுமொத்த பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய அழுத்தத்தினைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தியது

# பணவீக்க எதிர்பார்க்கைகள் அளவீட்டில் பிரதிபலிக்கப்பட்டவாறு, நிறுவன மற்றும் வீட்டலகுத் துறைகள் ஆகிய இரண்டினதும் பணவீக்க எதிர்பார்க்கைகள் 2025 காலப்பகுதியில் படிப்படியாக அதிகரித்தன

வரைபடம் 1.4

பணவீக்க எதிர்பார்க்கைகள் (கம்பனித் துறை) - 2025




குறிப்பு: இவ்வரைபடமானது மாதாந்த ரீதியாக நடாத்தப்படுகின்ற பணவீக்க எதிர்பார்க்கைகளுக்கான அளவீட்டின் தொடர்ச்சியான சுற்றுக்களில் அறிக்கையிடப்பட்டவாறான கம்பனித் துறைக்கான பணவீக்க எதிர்பார்க்கைகளை வகைகூறுகின்றது. கிடை அச்சானது அளவீட்டு சுற்றுக்களை (மாதாந்த) வகைகூறுவதுடன், ஒவ்வொரு வரைபடக் கோடுகளும் 3 மாதங்கள், 6 மாதங்கள், 1 ஆண்டு, 2 ஆண்டுகள் மற்றும் 3 ஆண்டுகள் ஆகிய வேறுபட்ட கால எல்லைகளின் பணவீக்க எதிர்பார்க்கைகளை குறித்துரைக்கின்றன. 3 மாத, 6 மாத மற்றும் 1 ஆண்டு கால எல்லைகள் குறுங்கால எதிர்பார்க்கைகளைப் பிரதிபலிப்பதுடன் 2 ஆண்டுகள் மற்றும் 3 ஆண்டுகள் கால எல்லைகள் நடுத்தரகால எதிர்பார்க்கைகளை பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு தொடரின் மாற்றங்களும் எதிர்பார்க்கைகள் காலப்போக்கில் எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

உதாரணமாக, 2025 மார்ச்சில், 3 மாதங்கள் முன்னோக்கிய (செம்மஞ்சள் கோடு), 6 மாதங்கள் முன்னோக்கிய (பச்சைக் கோடு) மற்றும் 1 ஆண்டு முன்னோக்கிய (நீலக் கோடு) எதிர்பார்க்கைகள் முறையே -0.9 சதவீதம், 0.7 சதவீதம் மற்றும் 2.6 சதவீதத்தை குறித்துக்காட்டுகின்றன. 2025 திசெம்பர் மாதத்தில், இவ்வளவீடுகள் முறையே 3.7 சதவீதம், 4.3 சதவீதம் மற்றும் 4.6 சதவீதத்திற்கு அதிகரித்து, குறுங்கால பணவீக்க எதிர்பார்க்கைகளில் அதிகரிப்பினை பிரதிபலிக்கின்றன.


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **நிறுவனத் துறைக்காக,** குறுங்கால பணவீக்க எதிர்பார்க்கைகள் 2025இன் முற்பகுதியில் **இலக்கிற்குக் கீழாகத்** தொடர்ந்தும் காணப்பட்ட போதிலும் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து 5 சதவீத இலக்கினை நோக்கிப் படிப்படியாக அதிகரித்தன
- **வீட்டலகுகளின்** பணவீக்க எதிர்பார்க்கைளும் ஆண்டு காலப்பகுதியில் இதனையொத்த **மேல்நோக்கிய அசைவொன்றினைக்** காட்டிய போதிலும், **நிறுவனத் துறையுடன் ஒப்பிடுகையில் தாழ்ந்தளவிலான மட்டமொன்றில் தொடர்ந்தும் காணப்பட்டு,** கடந்த கால பணவீக்கத்தின் அடிப்படையில் எதிர்பார்க்கைகளினைச் சீராக்குவதற்கான அவர்களின் மனப்பாங்கினைப் பிரதிபலித்தன
- **நிறுவனத் துறையின் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான** பணவீக்க எதிர்பார்க்கைகள் 2025இன் பிற்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட சிறிதளவிலான மேல்நோக்கிய சீராக்கமொன்றுடன் மாத்திரம் பணவீக்க இலக்கினை அண்மித்துத் தொடர்ந்தும் நன்கு நிலைநிறுத்தப்பட்டன


# அண்மைய இற்றைப்படுத்தல்

மத்திய கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்ற யுத்தத்திலிருந்தான கசிவுத்தாக்கங்களினைக் குறிப்பாக, உள்நாட்டு வலு விலைகளில் குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய சீராக்கங்களினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், முதன்மைப் பணவீக்கமானது 2026 ஏப்பிறலில் 5.4 சதவீதத்திற்குத் துரிதமடைந்தது

**முதன்மைப் பணவீக்கம் மற்றும் மையப் பணவீக்கம் என்பவற்றின் அசைவுகள்**




**முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)**




# தனியார் மற்றும் அரச துறைகள் ஆகிய இரண்டிலுமுள்ள ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025இல் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்துள்ளன

- தனியார் மற்றும் அரச துறைகள் ஆகிய இரண்டிலுமுள்ள ஊழியர்களின் **பெயரளவுக் கூலிகள்** 2025இல் அதிகரித்தமையானது **படிப்படியாக வளர்ச்சியடைகின்ற தொழிலாளர் சந்தை நிலைமைகள்** மற்றும் **நிர்வாக ரீதியான கூலிச் சீராக்கங்கள் என்பவற்றினைப்** பிரதிபலித்தன

- **முறைசார் மற்றும் முறைசாராத ஆகிய இரு தனியார் துறை ஊழியர்களினதும்** பெயரளவுக் கூலிகள் 2025 ஆண்டு முழுவதிலும் மேல்நோக்கிய போக்கொன்றினைக் காட்டின

வரைபடம் 1.8


அரச துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100)இன் அசைவுகள் (பெயரளவு)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.6

முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100)இன் அசைவுகள் (பெயரளவு)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


- **அரச துறை ஊழியர்களின்** பெயரளவுக் கூலிகள் 2025 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தமையானது 2025ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அரச துறைச் சம்பளத் திருத்தத்தின் நடைமுறைப்படுத்தலினைப் பிரதிபலித்தது

- பெயரளவுக் கூலி அதிகரிப்புக்கள் மற்றும் ஒப்பீட்டளவில் கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் ஆகியவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, **உண்மைக் கூலிகள் 2025இல் மேம்பட்டன.**

# ஊழியர் சேமலாப நிதியத்தின் அடிப்படையிலான முறைசார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணினைப் பயன்படுத்தித் தனியார் துறைக் கூலி இயக்கவாற்றல்களில் உள்ள தரவு சார்ந்த இடைவெளிகளினை நிவர்த்திசெய்தல்

- 2022-2023 காலப்பகுதியில் காணப்பட்ட பணவீக்கத்தினைத் தொடர்ந்து மிகவும் குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்பொன்றுடன் **தனியார் துறைக் கூலிகளில் படிப்படியான மேல்நோக்கியதொரு போக்கு**


சி.கு வரைபடம் ஆ 2.2
ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான முறைசார் துறைக்கான கூலி வீத சுட்டெண்ணின் போக்கு




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி அலுவலகர்களின் கணிப்புகள்

- **2025இன் நடுப்பகுதியில் ஓரளவு மிதமடைதலுடன் நீடித்துநிலைத்திருக்கின்ற கூலி வளர்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டதனைத் தொடர்ந்து,** ஆண்டின் இறுதியில் அதிகரிப்பொன்று காணப்பட்டமையானது பொருளாதார நடவடிக்கை, பருவகாலக் காரணிகள் மற்றும் கூலி நிர்ணய நடைமுறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களினைப் பிரதிபலித்தது

சி.கு வரைபடம் ஆ 2.3
ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலான முறைசார் துறைக்கான கூலி வீத சுட்டெண்ணின் போக்குகள்





*மூலம்*: இலங்கை மத்திய வங்கி அலுவலகர்களின் கணிப்புகள்

# உண்மைத் துறை அபிவிருத்திகள்

# இலங்கையின் பொருளாதாரம், 2025இல் அதன் உத்வேகமான வளர்ச்சியினைப் பேணி, தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டிலும் 5 சதவீத உண்மை விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தது


வரைபடம் 1.9
வருடாந்த உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்கள் (அ)




(அ) அடிப்படை ஆண்டு 2015

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 1.10
2025இல் நிலையான விலைகளில் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி (%) (அ)




(அ) அடிப்படை ஆண்டு 2015

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

| விடயம் | 2025 | 2024 |
|---|---|---|
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உ. (ஐ.அ.டொ) | 5,003 | 4,546 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | | |
| ரூ. மில் | 32,750,844 | 30,095,825 |
| ஐ.அ.டொ | 108,837 | 99,634 |

- ஒட்டுமொத்த வளர்ச்சியானது **தயாரிப்பு** மற்றும் **கட்டுமான** நடவடிக்கைகளிலிருந்தான குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களினால் உந்தப்பட்ட கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு **பிரதான காரணமாக அமைந்திருந்தது**.
- **நிதியியல் பணிகள்** மற்றும் **போக்குவரத்து நடவடிக்கைகளில்** நீடித்து நிலைத்திருக்கின்ற வளர்ச்சியினால் பிரதானமாக துணையளிக்கப்பட்டு, **பணிகள்** நடவடிக்கைகளும் கணிசமானளவில் பங்களிப்புச்செய்தன.
- **விலங்கு உற்பத்தி** மற்றும் **தேங்காய் வளர்ச்சி** என்பவற்றினால் உந்தப்பட்டு, **வேளாண்மை** நடவடிக்கைகளும் நேர்க்கணியமாக பங்களித்தன.

# நடைமுறை விலைகளில் செலவின நோக்கிலிருந்து, 2025இல் நுகர்வு மற்றும் முதலீடு என்பன வளர்ச்சியடைந்த அதேவேளை தேறிய வெளிநாட்டுக் கேள்வி தொடர்ந்தும் சுருக்கமடைந்து காணப்பட்டது

**அட்டவணை 1.3**
**நடைமுறைச் சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வி மற்றும் சேமிப்புக்கள் (அ)(ஆ)**

| பொருளாதார நடவடிக்கை | ரூ. பில்லியன் | | மாற்றத்திற்கான வீதம் % | | மொ.உ.உ இன் சதவீதமாக % | |
|---|---|---|---|---|---|---|
| | 2024 (இ) | 2025 | 2024 (இ) | 2025 | 2024 (இ) | 2025 |
| 1. உள்நாட்டு கேள்வி | 30,880.6 | 34,019.7 | 9.8 | 10.2 | 102.6 | 103.9 |
| 1.1 நுகர்வு | 22,951.4 | 24,310.6 | 7.0 | 5.9 | 76.3 | 74.2 |
| தனியார் | 20,859.6 | 22,102.3 | 6.5 | 6.0 | 69.3 | 67.5 |
| அரசு | 2,091.8 | 2,208.3 | 12.6 | 5.6 | 7.0 | 6.7 |
| 1.2 முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்) | 7,929.3 | 9,709.1 | 18.6 | 22.4 | 26.3 | 29.6 |
| மொத்த நிலையான மூலதன உருவாக்கம் | 5,743.1 | 6,803.2 | 14.8 | 18.5 | 19.1 | 20.8 |
| இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் கையகப்படுத்தல்களிலிருந்து கழித்தெ தாதுக்கப்பட்ட பெறுமதிகள் | 2,186.2 | 2,905.9 | 30.0 | 32.9 | 7.3 | 8.9 |
| 2. தேறிய வெளிநாட்டு கேள்வி | -784.8 | -1,268.8 | -32.6 | -61.7 | -2.6 | -3.9 |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி | 5,945.7 | 6,212.0 | 4.8 | 4.5 | 19.8 | 19.0 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதி | 6,730.5 | 7,480.8 | 7.4 | 11.1 | 22.4 | 22.8 |
| 3. மொத்த கேள்வி (மொ.உ.உ) (1 + 2) | 30,095.8 | 32,750.8 | 9.3 | 8.8 | 100.0 | 100.0 |
| 4. உள்நாட்டு சேமிப்புக்கள் (3 - 1.1) | 7,144.5 | 8,440.3 | 17.3 | 18.1 | 23.7 | 25.8 |
| தனியார் | 8,453.6 | 8,223.3 | 9.2 | -2.7 | 28.1 | 25.1 |
| அரசாங்கம் (ஈ) | -1,309.1 | 217.0 | 20.7 | 116.6 | -4.3 | 0.7 |
| 5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் (உ) | -784.8 | -608.6 | 5.9 | 22.4 | -2.6 | -1.9 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய இரண்டாந்தர வருமானம் (உ) | 1,942.7 | 2,394.5 | 1.9 | 23.3 | 6.5 | 7.3 |
| 7. தேசிய சேமிப்புக்கள் (4 + 5 + 6) | 8,302.4 | 10,226.1 | 15.9 | 23.2 | 27.6 | 31.2 |
| 8. சேமிப்புக்கள் முதலீட்டு இடைவெளி | | | | | | |
| உள்நாட்டு சேமிப்புக்கள் - முதலீடு (4 - 1.2) | -784.8 | -1,268.8 | | | -2.6 | -3.9 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7 - 1.2) | 373.1 | 517.0 | | | 1.2 | 1.6 |
| 9. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை (2 + 5 + 6) (உ) | 373.1 | 517.0 | | | 1.2 | 1.6 |

(அ) அடிப்படை ஆண்டு 2015
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) மத்திய அரசாங்கத்தின் நடைமுறைக் கணக்கு நிலுவையாகும்.
(உ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான ஏதேனும் வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**5.9%** ↑ நுகர்வுச் செலவினம்

**22.4%** ↑ முதலீட்டுச் செலவினம்

**-61.7%** ↓ தேறிய வெளிநாட்டுக் கேள்வி

- **நுகர்வுச் செலவினம்:** தனியார் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது
- **முதலீட்டுச் செலவினம்:** போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் கட்டடவாக்கத்தின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பிரதானமாக பங்களித்தது
- **தேறிய வெளிநாட்டுக் கேள்வி:** பொருட்களினதும் பணிகளினதும் ஏறுமதிகளை விட பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர்ந்தளவிலான வளர்ச்சி.

# வருமானக் கண்ணோட்டத்தில், அனைத்து வருமான உருவாக்கிகள் 2025ஆம் ஆண்டின் வளர்ச்சிக்கு நேர்க்கணியமாக பங்களிப்புச்செய்தன

**5.0%** ↑ **மொத்த கலப்பு வருமானம்**

**5.4%** ↑ **மொத்த தொழிற்பாட்டு மிகை**

**5.1%** ↑ **ஊழியர்களின் நட்டஈடு**

**நிறுவனசார் துறை வகைப்படுத்தலுக்கமைய,**

- **நிதியல்லா கூட்டுத்தாபனங்கள்** பாரிய வருமானம் ஈட்டும் துறையாகக் **காணப்பட்டன**
- அதனைத்தொடர்ந்து **வீட்டலகு, நிதியியல் கூட்டுத்தாபனங்கள் மற்றும் பொது அரசாங்கம்** ஆகியன காணப்பட்டன.

**அட்டவணை 1.4**
**நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமானக் கூறுகள் (அ)(ஆ)**

சதவீதப் பங்கு (%)

| விடயம் | 2024 (இ) | | | | | 2025 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் | நிதிக் கூட்டுத்தாபனங்கள் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்தப் பொருளாதாரம் | நிதியல்லா கூட்டுத்தாபனங்கள | நிதிக் கூட்டுத்தாபனங்கள் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்தப் பொருளாதாரம் |
| ஊழியர்களின் நட்டஈடு | 54.2 | 7.6 | 20.3 | 18.0 | 100.0 | 54.1 | 7.1 | 21.1 | 17.6 | 100.0 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 81.7 | 16.1 | 2.2 | - | 100.0 | 83.0 | 14.8 | 2.2 | - | 100.0 |
| மொத்த கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | 100.0 | - | - | - | 100.0 | 100.0 |
| உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள் | 66.5 | 13.8 | - | 19.7 | 100.0 | 67.5 | 12.5 | - | 20.1 | 100.0 |
| அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டப்பட்டவை | 43.5 | 7.7 | 6.5 | 42.3 | 100.0 | 44.0 | 7.1 | 6.7 | 42.1 | 100.0 |

(அ) அடிப்படை ஆண்டு 2015
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

# தொழிலின்மை குறைவடைந்திருப்பினும் தொழிலாளர் சந்தையிலுள்ள கட்டமைப்பு ரீதியிலான சிக்கல்கள் இன்னும் நீடிக்கின்றன

**அட்டவணை 1.5**
**குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு**

| விடயம் | 2024 | 2025 (அ) |
|---|---|---|
| குடும்ப அலகுகளின் எண்ணிக்கை '000 ஆட்கள் (ஆ) | 17,548 | 17,307 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 8,316 | 8,554 |
| தொழிலுள்ளோர் | 7,950 | 8,219 |
| தொழிலற்றோர் | 366 | 335 |
| தொழிலின்மை வீதம் | 4.4 | 3.9 |
| ஆண் | 3.0 | 2.8 |
| பெண் | 7.1 | 6.1 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (இ) | 47.4 | 49.4 |
| ஆண் | 67.4 | 69.1 |
| பெண் | 29.8 | 32.5 |

(அ) நான்கு காலாண்டுகளின் சராசரி
(ஆ) 15 வயதுகளும் மற்றும் அதற்கு மேற்பட்டவையும்
(இ) குடும்ப அலகுகளின் குடித்தொகையின் சதவீதமாக தொழிற்படைப் பங்கேற்பு

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**49.4%** ↑
தொழிற்படை பங்கேற்பு வீதம்

**3.9%** ↓
தொழிலின்மை வீதம்

**-0.7%** ↓
நடுவாண்டுக் குடித்தொகை*

**-1.1%** ↓
வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான புறப்படுகைகள்

* தற்காலிகமானது. பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் 31.03.2026 அன்று தொகுக்கப்பட்ட 2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளுக்கான நடுவாண்டு குடித்தொகை மதிப்பீடுகளின் அடிப்படையில்.

# நாணயத் துறை அபிவிருத்திகள் மற்றும் கொள்கைகள்

# மத்திய வங்கியானது, 2023இன் நடுப்பகுதியில் தொடங்கிய தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடொன்றினை 2025 முழுவதும் பேணியது

இதன் பின்னணியில் மற்றும் இலங்கைக்கு தாக்கம்செலுத்தக்கூடிய உயர்வடைந்த உலகளாவிய நிச்சயமற்றத்தன்மைகளுக்கு மத்தியில், மத்திய வங்கியானது ஆண்டுக்காலப்பகுதியில் மேற்கொண்ட ஒரே கொள்கை வீதச் சீராக்கமாக, 2025 மேயில் **கொள்கை வீதத்தை** மேலுமொரு 25 அடிப்படைப் புள்ளிகளினால் **குறைத்தது**

இக்குறைப்பினால் ஆதரவளிக்கப்பட்டு, 2025இல் ஒட்டுமொத்த **சந்தை வட்டி வீதக் கட்டமைப்பானது கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டது**


உள்நாட்டுப் பணச் சந்தையில் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகளுக்கும் நடவடிக்கைக்கும் மத்தியில், மத்திய வங்கியானது திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக **திரவத்தன்மை உட்செலுத்துகைகளை** 2025இன் முற்பகுதியில் படிப்படியாகக் **குறைத்து இடைநிறுத்தியது**

2025 முழுவதும், நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் வகையில், மத்திய வங்கி **நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறையினை தொடர்ச்சியாகப் பேணியது**

2025 ஆண்டின் போது, மத்திய வங்கியானது, பரந்தளவிலான ஆர்வலர்களின் எதிர்பார்க்கைகளை செயல்திறன்மிக்க வகையில் முகாமைசெய்வதற்காக, **அதன் நாணயக் கொள்கை தொடர்பூட்டலை தொடர்ச்சியாக வலுப்படுத்தியது**

# ஆண்டின் பிற்பகுதியில் ஓர் சிறிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்டபோதிலும், 2025 இல் ஒட்டுமொத்த சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் கீழ்நோக்கி சீராக்கம் செய்யப்பட்டன

வரைபடம் 1.12
தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள்




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
பொதுக்கடன் முகாமைத்துவ அலுவலகம்


- **தளர்த்தப்பட்ட** நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் தொடர்ச்சி
- **தாழ்வான பணவீக்கச்** சூழல்,
- **நன்கு நிலைநிறுத்தப்பட்ட** பணவீக்க எதிர்பார்க்கைகள்

ஆகியவற்றால், சந்தை வட்டி வீதங்களில் ஏற்பட்ட **ஒட்டுமொத்த வீழ்ச்சி** உந்தப்பட்டது.

# பொருளாதார நடவடிக்கையில் இடம்பெறுகின்ற மீட்சியைப் பிரதிபலித்து, 2025இல் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுக்கிடையிலான கொடுகடனில் பரந்த அடிப்படையிலான விரிவாக்கம் அவதானிக்கபட்டது

- பணிகள் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் **பாரியளவிலான விரிவாக்கத்தினைப்** பதிவுசெய்தது.
    - பணிகள் துறையினுள், **மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் நிதியியல் மற்றும் வியாபாரப் பணிகள் போக்குவரத்து மற்றும் கல்வித்** துணைத் துறைகள் என்பவற்றில் குறிப்பிடத்தக்க கொடுகடன் வளர்ச்சி அவதானிக்கப்பட்டது.
- கைத்தொழிற்துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன், **கட்டடவாக்கம்; உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இயந்திர மற்றும் போக்குவரத்துக் கருவிகள்** துணைத்துறைகளினால் பிரதானமாக உந்தப்பட்டிருந்தது.
- **தனிப்பட்ட கடன்களும் முற்பணங்களும்** அதிகரித்த **தங்கம் பிணையளிக்கப்பட்ட கடன்வழங்கல், நீடித்துழைக்கும் நுகர்வோர் பொருட்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் மற்றும் உயர்வான கடனட்டை தொடர்புபட்ட கடன் அளவுகள்** என்பன மூலம் தூண்டப்பட்டு, **குறிப்பிடத்தக்களவில்** அதிகரித்தன.
- **வேளாண்மை** ஆண்டு காலப்பகுதியில் ரூ. 163 பில்லியனால் **விரிவடைந்து,** மொத்த கொடுகடன் விரிவாக்கத்தில் ஏறத்தாழ 8 சதவீதம் பங்களித்தது.

வரைபடம் 1.16
துணைத் துறைகளில் தனியார் துறைக்கான கொடுகடனின் வருடாந்த விரிவாக்கம் (ரூ. பில்) - 2025
(உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மாதாந்த அளவீட்டின் அடிப்படையிலமைந்தது)





குறிப்பு: முக்கிய துறைகளின் கொடுகடன் அளவின் வருடாந்த விரிவாக்கம் அடைப்புக்குறிக்குள் வழங்கப்பட்டுள்ளது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி


# உள்நாட்டுக் கொடுகடன் மீள்சமநிலைப்படுத்தல்: அரச எதிர் தனியார் துறை இயக்கவாற்றல்கள்

**சிறப்பு வரைபடம் 1.5**
**உள்நாட்டுக் கொடுகடன் மீள்சமநிலைப்படுத்தல்: அரச எதிர் தனியார் துறை இயக்கவாற்றல்கள்**

**உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கம் (தனியார் எதிர் அரசு)**




**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தனியார் மற்றும் அரச துறைக்கான கொடுகடன்**




குறிப்பு: 1. உள்நாட்டுக் கொடுகடன் என்பது வங்கித்தொழில் துறையால் தனியார் மற்றும் அரச துறைகளுக்கு வழங்கப்படும் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களை குறிக்கின்றது. அரச துறைக்கான கொடுகடனானது அரச பிணையங்களில் முதலீடுகள் உள்ளடங்கலான அரசாங்கத்திற்கு விரிவாக்கப்பட்டுள்ள கொடுகடன், மற்றும் அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படும் கொடுகடன்களையும் உள்ளடக்கியதாகும்.
2. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார்துறை கொடுகடன் விகிதமானது மொத்த வெளிநின்ற கொடுகடனுக்கும் அக்காலாண்டுடன் தொடர்புடைய ஆண்டிற்கான பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதமாகக் கணிப்பிடப்படுகின்றது.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

- பொருளாதார நெருக்கடிக்கு முன்னரான ஆண்டுகளில், அரசாங்கமானது **உள்நாட்டு வங்கித்தொழில் துறையிடமிருந்து** நிதியளித்தலை **அதிகளவில் சார்ந்திருந்து,** தனியார் துறை கொடுகடன் மீது **அருகிச்செல்லும் விளைவுக்கு** பங்களிக்கின்றது.
- நெருக்கடி காலப்பகுதியில், அரசாங்கமானது உள்நாட்டு மூலங்களில் **பெரும்பாலும் முழுமையாகச்** சார்ந்திருந்தது
- **இறைத் திரட்சி** முயற்சிகள் மற்றும் **சட்டவாக்கச் சீர்திருத்தங்கள்,** நெருக்கடிக்குப் பிந்திய பொருளாதாரத்தில் சாதகமான பெறுபேறுகளை விளைவித்துள்ளதுடன், **தனியார் துறைக் கடன்பாடுகளுக்கு இடமளித்துள்ள, அரச துறைக் கொடுகடனில் மிதமான தன்மையை** ஏற்படுத்துகின்றது.
- அதற்கமைய, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தனியார் துறைக் கொடுகடன் 2025 இறுதியில் 31.2 சதவீதத்திற்கு **படிப்படியாக மீட்சியடைந்தது.** எனினும், இது நெருக்கடிக்கு முன்னரான மட்டங்களுக்கு **கீழே** இன்னமும் **காணப்படுகின்றது.**

# மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாக உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைதலையும் பேணுதலையும் மத்திய வங்கிச் சட்டம் குறித்துரைக்கின்றது

## நாணயக் கொள்கைக் கட்டமைப்பு

- ✓ **நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல்**
  - ✓ விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கு நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினுள் மத்திய வங்கியானது நாணயக் கொள்கையை வகுத்து நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துகின்றது.
- ✓ நாணயக் கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கைக்கமைய, **5 சதவீதம் கொண்ட இலக்கில் காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தை பேணுவதற்கு மத்திய வங்கி தேவைப்படுத்தப்படுகின்றது.**
  - ✓ 2024 இல் இறுதி மூன்று காலாண்டுகளிலும் 2025 காலப்பகுதியிலும், **காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது பணவீக்க இலக்கிலிருந்து** குறைந்தளவிலான மட்டத்தில் 2 சதவீதப் புள்ளிகளால் **விலகலடைந்தது.**
  - ✓ இலக்கு விலகல் பற்றிய ஐந்து அறிக்கைகள் நிதியமைச்சரினூடாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
    - ✓ 2026 மாச்சில் ஆறாவது அறிக்கை நிதியமைச்சருக்கு சமர்பிக்கப்பட்டது.

## ஓரிரவு கொள்கை வீதம்

- ✓ ஓரிரவு கொள்கை வீதமானது அதன் கொள்கை நிலைப்பாட்டை சமிக்ஞைப்படுத்துவதற்காக, **மத்திய வங்கியின் முக்கிய நாணயக் கொள்கை கருவியாக** செயற்படுகின்றது.
- ✓ **சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதமானது** நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் **தொழிற்பாட்டு இலக்காகத் தொடர்ந்தும் செயற்படுகின்றது**

## வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறலும்

- ✓ **பணவீக்க இலக்கினை பூர்த்திசெய்யத் தவறியமையால் நாணயக் கொள்கைச் சபையானது பாராளுமன்றம்/ பொதுமக்களுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தது.**
- ✓ மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றை உள்ளடக்ககின்ற **விடயங்கள் தொடர்பில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்காக,** ஒருங்கிணைப்புச் சபை **காலாண்டு ரீதியில்** கூடுகின்றது.
- ✓ **நாணயக் கொள்கை அறிக்கையினை** ஒவ்வொரு ஆண்டும் பெப்புருவரி மற்றும் ஓகத்தில் **ஆண்டிற்கு இருமுறை வெளியிடுகின்றது**


# வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

# இலங்கையின் வெளிநாட்டுத் துறை, தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகவும் நடைமுறைக்கணக்கு மிகையொன்றினைப் பதிவுசெய்ததன் மூலம் 2025இல் மேலும் வலுவடைந்தது

| நடைமுறைக் கணக்கு மிகைகள் | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் 1.4 பில் | ஐ.அ.டொலர் 1.2 பில் | ஐ.அ.டொலர் 1.7 பில் |

வரைபடம் 1.20

வருடாந்த வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு





**விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை மத்தியில், நடைமுறைக் கணக்கானது,**

- **வலுவான பணிகள் கணக்கு மிகை,**
- **தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட கணிசமான மேம்பாடு** மற்றும்
- **சுருக்கமடைகின்ற முதலாந்தரக் கணக்குப் பற்றாக்குறை**

என்பனவற்றினால் துணையளிக்கப்பட்டு, 2025இல் உயர்வான மிகையொன்றைப் பதிவுசெய்தது.

# வணிகப்பொருள் ஏற்றுமதிகள் 2025இல் குறிப்பிடத்தக்க விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்து, ஐ.அ.டொலர் 13.6 பில்லியன் அதியுயர்ந்த வருடாந்த ஏற்றுமதி மட்டத்தை எட்டியது

வரைபடம் 1.21
ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு





- **மேம்பட்ட கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஏற்றுமதிகளினால்** துணையளிக்கப்பட்டு, ஏற்றுமதி வருவாய்கள் **2025இல் 6.3 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தன**
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, ஏற்றுமதி வருவாய்கள் 2025இல் **12.5 சதவீதத்திற்கு** வகைகூறின

# வாகன இறக்குமதிகளினால் தூண்டப்பட்டு, வணிகப்பொருள் இறக்குமதிச் செலவினம் 2025இல் ஐ.அ.டொலர் 21.5 பில்லியனாக அதிகரித்து 14.0 சதவீதம் கொண்ட ஆண்டுக்காண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்தது

வரைபடம் 1.22

இறக்குமதிகளின் உள்ளமைப்பு




(அ) தனியாள் மற்றும் வர்த்தக நோக்குடைய வாகனங்களை உள்ளடக்குகின்றது.


(ஆ) பருப்பு வகைகள், வெங்காயம், உருளைக் கிழங்கு, அவரை வகை மற்றும் ஏனைய காய்கறிகளை உள்ளடக்குகின்றது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

- **வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை தளர்த்தல்** மற்றும் **உள்நாட்டுக் கேள்வி மற்றும் முதலீட்டு நடவடிக்கையில் படிப்படியான மீட்சி போன்றன** காரணமாக 2025இல் இறக்குமதிகள் அதிகரித்தன
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, இறக்குமதிச் செலவினம் 2025இல் **19.7** சதவீதத்திற்கு வகைகூறியது


# மோட்டார் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தலும் இறக்குமதிப் போக்குகளும்

### வருடாந்த வாகன இறக்குமதிகள்




மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

### மாதாந்த வாகன இறக்குமதிகள்





மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

- மோட்டார் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள் **படிப்படியாகத் தளர்த்தப்பட்டதுடன்,** தனியாள் வாகனங்கள் மீதான எஞ்சியுள்ள அனைத்து கட்டுப்பாடுகளும் 2025 சனவரியளவில் நீக்கப்பட்டன.
- நீண்டகால கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய **சாத்தியமான கேள்வி மிகையினை மிதமடையச் செய்வதற்கு** அரசாங்கமானது பல்வேறு தீர்வை மற்றும் தீர்வையற்ற வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது
- இவ்வழிமுறைகளுக்கு மத்தியில், 2025இல் **வாகன இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து,** இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நிலவிய ஆண்டுகாலப்பகுதியில் திரண்டிருந்த வலுவான உயர்வடைந்த கேள்வியையும் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் பிரதிபலித்தது
- இதன்விளைவாக, தனியாள் மற்றும் வர்த்தக நோக்குடைய வாகனங்கள் உள்ளடங்கலாக வாகன இறக்குமதிகள் மீதான செலவினம் **2025இல் ஐ.அ.டொலர் 2.04 பில்லியனிற்கு குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்து, 9.5 சதவீதம் கொண்ட மொத்த இறக்குமதிகளை** எடுத்துக்காட்டியது.

# வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2024இன் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2025இல் ஐ.அ.டொலர் 7.9 பில்லியனிற்கு விரிவடைந்தது


வரைபடம் 1.23
இருபுடை வர்த்தக நிலுவைகள்




- ஏற்றுமதி வருவாய்களையும் விடவும் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட சடுதியான விரிவாகத்தினை பெருமளவில் பிரதிபலித்து, **வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் **2025இல் விரிவடைந்தது**
- 2024இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4.1 பில்லியனிலிருந்து 2025இல் ஐ.அ.டொலர் 4.9 பில்லியனிற்கு குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்து, இலங்கை சீனாவுடன் **அதன் மிக உயர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையைப்** பதிவுசெய்தது
- மோட்டார் வாகன இறக்குமதிகள் காரணமாக, பெரும்பாலும் இந்தியாவுடனான வர்த்தகப் பற்றாக்குறையும் 2025இல் விரிவடைந்தது
- பிரதானமாக ஆடைகள் ஏற்றுமதிகளினால் ஆதரவளிக்கப்பட்டு, இலங்கை ஐக்கிய அமெரிக்காவுடன் ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் கொண்ட வர்த்தக மிகையைத் தொடர்ந்தும் பேணி வந்தது.

# பணிகள் கணக்கின் மிகை 2025இல் மேலும் அதிகரித்ததுடன் தொழிலாளர் பணவனுப்பல்கள் வரலாற்று ரீதியிலான உயர்வினைப் பதிவுசெய்தன

வரைபடம் 1.24
பணிகள் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள்




- **இரண்டாந்தர வருமானக் கணக்கில் மிகை பிரதானமாக, தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட ஐ.அ.டொலர் 8.1 பில்லியன் கொண்ட சடுதியான அதிகரிப்பினால் தூண்டப்பட்டு,** 2025இல் கணிசமானளவு அதிகரித்த அதேவேளை 2025இல் வரலாற்று உயர்வினைப் பதிவுசெய்தது

- **பணிகள் கணக்கு** 2024இன் ஐ.அ.டொலர் 3.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2025இல் **ஐ.அ.டொலர் 3.7** பில்லியன் கொண்ட மிகையினைப் **பதிவுசெய்தது**

- **2025இல் சுற்றுலாப் பயணி வருகைகள்,** 2018இல் பதிவாகிய **உச்சத்தை விஞ்சி** ஆண்டுக்காண்டு அடிப்படையில் 15.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது

- **சுற்றுலாத் துறை வருவாய்கள்** 2024 உடன் ஒப்பிடுகையில் 1.6 சதவீதம் கொண்ட சிறிய வளர்ச்சியினைப் பதிவுசெய்தது.

- **அதேவேளை, கணனி/தகவல் தொழில்நுட்பம் மற்றும் வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றிருந்தான உட்பாய்ச்சல்கள்** 2024 உடன் ஒப்பிடுகையில் சிறிதளவு மிதமடைந்தன

- வெளிநாட்டுப் பயணத்துடன் தொடர்புடைய **பணிகள் வெளிப்பாய்ச்சல்கள்** அதிகரித்த அதேவேளை போக்குவரத்துப் பணிகளுக்கான கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தன.

# 2025இல் நிதியியல் கணக்கு மிதமடைந்து காணப்பட்டது

**அட்டவணை 1.13**
**நிதியியல் கணக்கு**

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2024 (அ) | 2025 (ஆ) |
|---|---|---|
| நிதியியல் கணக்கு (தேறிய) | 965 | 904 |
| நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப்படுத்தல் | 1,970 | 1,431 |
| பொறுப்புக்களின் தேறிய உறப்படல் | 1,005 | 527 |
| நேரடி முதலீடு: சொத்துக்கள் | 110 | 98 |
| நேரடி முதலீடு: பொறுப்புக்கள் | 759 | 1,044 |
| சொத்துப் பட்டியல் முதலீடு: சொத்துக்கள் | 180 | -259 |
| சொத்துப் பட்டியல் முதலீடு: பொறுப்புக்கள் | 302 | -267 |
| நிதியியல் பெறுதிகள் | - | - |
| ஏனைய முதலீடுகள்: சொத்துக்கள் | -3 | 973 |
| ஏனைய முதலீடுகள்: பொறுப்புக்கள் | -56 | -250 |
| ஒதுக்குச் சொத்துக்கள் | 1,682 | 618 |
| தேறிய தவறுகளும் விடுபாடுகளும் | -254 | -808 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

| | 2024 | 2025 |
|---|---|---|
| கடன்கள் நீங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடு | ஐ.அ.டொலர் 759 மில் | **ஐ.அ.டொலர் 1,044 மில்** |
| கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடு | ஐ.அ.டொலர் 845 மில் | **ஐ.அ.டொலர் 1,154 மில்** |

துறைரீதியிலான அடிப்படையொன்றில், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஆண்டுகாலப்பகுதியில், முதன்மையாக துறைமுக கொள்கலன் முனையங்கள், இறப்பர் உற்பத்திகள், தயாரிப்பு மற்றும் ஆடைகள் மற்றும் புடவைகள் துறைகளுக்கு நெறிப்படுத்தப்பட்டன.

| | 2024 | 2025 |
|---|---|---|
| கொழும்பு பங்கு பரிவர்த்தனை | ஐ.அ.டொலர் 33 மில் | **ஐ.அ.டொலர் 122 மில்** |


முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் உள்ளடங்கலாக, கொழும்பு பங்கு பரிவர்த்தனை ஆண்டுகாலப்பகுதியில் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது

| | 2024 | 2025 |
|---|---|---|
| அரச பிணையங்கள் சந்தை | ஐ.அ.டொலர் 179 மில் | **ஐ.அ.டொலர் 248 மில்** |

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் உள்ளடங்கலாக அரச பிணையங்கள் சந்தை ஆண்டுகாலப்பகுதியில் தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது


# தொடர்ச்சியான இரு ஆண்டுகளின் உயர்வடைதலின் பின்னர் இலங்கை ரூபாவானது 2025 காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக தேய்வடைதலொன்றைப் பதிவுசெய்தது

வரைபடம் 1.28
நாளாந்த செலாவணி வீத அசைவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி


வரைபடம் 1.26
ஐ.அ.டொலரிற்கு எதிரான இலங்கை ரூபாவின் உயர்வு/ தேய்வு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

- **இலங்கை ரூபா** 2025இல் அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராக தேய்வடைந்த **அதேவேளை முக்கிய நாணயங்கள்** ஐ.அ.டொலருக்கெதிராக **கலந்த அசைவுகளை வெளிக்காட்டியது**

# வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளுக்கு மத்தியில், 2025இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனிற்கு முன்னேற்றமடைந்தன




**மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புதலுக்கு,**

- உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் **ஐ.அ.டொலர் 2.0 பில்லியன் கொண்ட** (பெறுமதி திகதி அடிப்படையில்) **வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய கொள்வனவுகள்**
- **பன்னாட்டு நாணய நிதியத்தின் தற்போது இடம்பெறுகின்ற விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் 4ஆம் மற்றும் 5ஆம் தொகுதிகளின் கிடைப்பனவு**
- **துரித நிதியிடல் சாதனத்தின் கீழ் அவசரகால நிதியிடல்**
- **ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான நிதியளிப்பு**

என்பன பிரதான காரணங்களாக அமைந்தன

# பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி திட்டத்தின் முன்னேற்றம்

- **மொத்த விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின்** இதுவரையிலான **பகிர்ந்தளிப்புக்கள்: சிறப்பு எடுப்பனவு உரிமை 1.27 பில்லியன் (ஐ.அ.டொலர் 1.74 பில்லியன்)**
- *டித்வா புயலினால்* எழுந்த அவசர சென்மதி நிலுவை மற்றும் இறை அழுத்தங்களைத் தீர்ப்பதற்கு துரித நிதியிடல் சாதனத்தின் கீழ் **2025 திசெம்பரில் சிறப்பு எடுப்பனவு உரிமை 150.5 மில்லியன் (ஐ.அ.டொலர் 206 மில்லியன்) வழங்கப்பட்டது.**
- **கணிசமானளவிலான இறைத் திரட்சி, மேம்படுத்தப்பட்ட பணவீக்க பெறுபேறுகள், வலுவான ஒதுக்கு நிலைமை, ஆளுகை மற்றும் செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடலில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் போன்றவற்றை** இதுவரையிலான அடைவுகள் உள்ளடக்குகின்றன.

5ஆவது* மற்றும் 6ஆவது மீளாய்வுகள் நிறைவடைந்தவுடன், இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 6ஆவது மற்றும் 7ஆவது தொகுதிகளையும் பெறுவதற்கு இலங்கை எதிர்பார்க்கின்றது




ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டம் 2027இல் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது

** 2025 திசெம்பரில் நிறைவேற்றப்படவேண்டிய இத்திட்டத்தின் ஐந்தாவது மீளாய்வு டித்வா புயலினால், அதன் பொருளாதாரத் தாக்கம் மற்றும் பொருத்தமான கொள்கைப் பதிலிறுப்பு போன்றவற்றின் மதிப்பீடொன்றை வழங்குவதற்காகப் பிற்போடப்பட்டது.*

# நிதியியல் முறைமை மற்றும் கொள்கைகளின் நிலைமை

# தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் மேம்பட்டு வருகின்ற பேரண்டப்பொருளாதார நிலைமைகள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, 2025இல் வங்கித்தொழில் துறை தொடர்ச்சியாக விரிவடைந்தது

**அட்டவணை 2.3**
**வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமைப்பு**

| விடயம் | 2024 (அ) | | 2025 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2024 | 2025 |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | 11,476.7 | 51.8 | 13,933.2 | 55.9 | 4.1 | 21.4 |
| முதலீடுகள் | 9,089.8 | 41.0 | 9,369.6 | 37.6 | 24.5 | 3.1 |
| ஏனையவை (இ) | 1,580.3 | 7.1 | 1,619.3 | 6.5 | (23.8) | 2.5 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வைப்புக்கள் | 17,969.3 | 81.1 | 19,927.4 | 80.0 | 8.1 | 10.9 |
| கடன் பெறுகைகள் | 1,292.9 | 5.8 | 1,678.2 | 6.7 | (7.5) | 29.8 |
| மூலதன நிதிகள் | 2,054.1 | 9.3 | 2,374.0 | 9.5 | 16.3 | 15.6 |
| ஏனையவை | 830.5 | 3.7 | 942.5 | 3.8 | 38.2 | 13.5 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | 22,146.8 | 100.0 | 24,922.1 | 100.0 | 8.6 | 12.5 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- வங்கித்தொழில் துறையின் **கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்** 2024 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட **4.1 சதவீதத்துடன்** ஒப்பிடுகையில் 2025 இறுதியில் **21.4 சதவீதமான** ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.
- வங்கித்தொழில் துறையின் **கட்டம் 3 கடன்கள் விகிதமானது** 2024 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட **12.3 சதவீதத்திலிருந்து** 2025 இறுதியில் **9.7 சதவீதத்திற்குக்** குறைவடைந்த போதிலும், நெருக்கடிக்கு முன்னைய மட்டத்துடன் ஒப்பிடுகையில் உயர்வடைந்து காணப்பட்டது.
- வங்கித்தொழில் துறையின் **இலாபத்தன்மை குறிகாட்டிகள்** 2025 காலப்பகுதியில் சிறியளவில் வீழ்ச்சியடைந்த அதேவேளை, ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளிலும் பார்க்க **மூலதனத் தாங்கியிருப்புக்கள் நன்கு மேலாகத் காணப்பட்டது.**

# நிதிக் கம்பனிகள் துறையானது அதன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்ததுடன், 2025 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்கதொரு கொடுகடன் விரிவாக்கத்தினைப் பதிவுசெய்த அதேவேளை, ஆண்டு முழுவதும் போதியளவிலான மூலதனத் தாங்கியிருப்புக்களுடன் தாக்குப்பிடிக்குந்தன்மையினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது

அட்டவணை 2.7
நிதிக்கம்பனிகள் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமைப்பு

| விடயம் | 2024 (அ) | | 2025 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2024 | 2025 |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் (தேறிய) | 1,428.3 | 74.1 | 2,227.9 | 80.2 | 22.6 | 56.0 |
| முதலீடுகள் | 352.2 | 18.3 | 375.0 | 13.5 | (8.7) | 6.5 |
| ஏனையவை (இ) | 147.9 | 7.7 | 173.8 | 6.3 | 2.0 | 17.5 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வைப்புக்கள் | 1,056.4 | 54.8 | 1,265.2 | 45.6 | 13.0 | 19.8 |
| கடன் பெறுகைகள் | 305.4 | 15.8 | 849.3 | 30.6 | 15.3 | 178.1 |
| மூலதன நிதிகள் | 468.2 | 24.3 | 531.0 | 19.1 | 13.6 | 13.4 |
| ஏனையவை | 98.4 | 5.1 | 131.3 | 4.7 | 17.7 | 33.4 |
| மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள் | 1,928.4 | 100.0 | 2,776.7 | 100.0 | 13.7 | 44.0 |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், நிலையான சொத்துக்கள் மற்றும் பயன்பாட்டுரிமைச் சொத்து என்பவற்றை பிரதானமாக கொண்டுள்ளது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

- நிதிக் கம்பனிகள் துறையின் **கடன்கள் மற்றும் முற்பணங்கள்,** நிதிக் குத்தகைகள், வாகனக் கடன்கள் மற்றும் தங்கத்தினால் பிணையளிக்கப்பட்ட கடன்கள் என்பவற்றில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக, 2024 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட **22.6 சதவீத** வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2025 இறுதியில் ஆண்டிற்காண்டு **56.0 சதவீதத்தினால்** அதிகரித்தது.
- **மொத்த கட்டம் 3 கடன்கள் விகிதமானது** 2024 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட **11.5 சதவீதத்துடன்** ஒப்பிடுகையில் 2025 இறுதியில் 6.1 சதவீதத்திற்குக் வீழ்ச்சியடைந்தது.
- துறையின் **மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்** 2024 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட **21.3 சதவீதத்துடன்** ஒப்பிடுகையில் 2025 இறுதியில் **18.7 சதவீதத்திற்கு** வீழ்ச்சியடைந்தது.

# 2025இல், வெளிவாரி நிச்சயமற்றத்தன்மைகள் மற்றும் குறைவடைந்த வெளிநாட்டு பாய்ச்சல்கள் என்பவற்றிலிருந்தான இடைக்கிடையேயான வீழ்ச்சிகளிற்கு மத்தியில் பங்குரிமைச் சந்தையானது வலுவான செயலாற்றத்தைக் கொண்டிருந்தது

வரைபடம் 2.7
பங்குரிமைச் சந்தை விலைச் சுட்டிகளின் அசைவு மற்றும் சந்தை மூலதனமாக்கல்




மூலம் : கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

- **அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 41.9 சதவீதத்தினாலும் ஸ்டான்டாட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் 26.6 சதவீததத்தினாலும்** வளர்ச்சியடைந்ததால், பங்குரிமைச் சந்தையானது வலுவான ஈட்டல்களுடன் 2025இனை நிறைவுசெய்தது.

# 2025 காலப்பகுதியில், நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மையையும் உறுதிப்பாட்டினையும் மேம்படுத்துவதற்காக, மத்திய வங்கி முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளை தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தியது

நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் முறைமைசார் இடர்நேர்வுகளை அடையாளம் காணவும், மதிப்பீடு செய்யவும், தணிக்கவும், தொடர்ச்சியாக கண்காணிக்கவும் முன்கூட்டிய வழிமுறைகளை மேற்கொள்வதற்கான அதன் பேரண்ட முன்மதியுடைய மேற்பார்வையை மத்திய வங்கி தொடர்ந்தது.

- **உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளைக்** குறித்துரைப்பதற்கான கட்டமைப்பு மீளாய்வு செய்யப்பட்டு, 2025 ஏப்பிறலில் ஐந்து உரிமம்பெற்ற வங்கிகள் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக குறித்துரைக்கப்பட்டன.
- 2025 யூலையில், மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடையதான பெறுமதிக்கான கடன் உச்சவரம்புகளுக்கான திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், 2025 நவெம்பரில் வரம்புகள் மேலும் இறுக்கமடைந்தன.

2025இல், உரிமம்பெற்ற வங்கிகளின் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்குந்தன்மையை மேம்படுத்துதலானது மத்திய வங்கியின் முக்கிய கவனம் செலுத்தப்பட்ட விடயப்பரப்புக்களிலொன்றாக இருந்தது. அதன்படி, உரிமம்பெற்ற வங்கிகளின் தொழிற்பாட்டுசார் தாக்குப்பிடிக்குந்தன்மையை வலுப்படுத்தும் நோக்கில், **“உரிமம்பெற்ற வங்கிகளின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்புச் சம்பவங்களை அறிக்கையிடல்”** மீதான 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கையானது வெளியிடப்பட்டது.

**நிலைபேறான நிதி வழிகாட்டல் 2.0** 2025 மேயில் அறிமுகப்படுத்தப்பட்டு, இலங்கையின் நிதியியல் துறைக்குள் நிலைபேறான நிதியினை முன்னேற்றுவதில் முக்கிய மைல்கல்லொன்றை குறித்துரைக்கின்றது.

டித்வா புயல் மற்றும் வெள்ளத்துடன் தொடர்புடைய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களிற்கும் நிவாரண நடவடிக்கைகளை வழங்குவதற்காக **“அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உதவுவதற்கான நிவாரண நடவடிக்கைகள்”** மீதான 2025ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

# நிதியியல் முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்காக, மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது

நிதிக் கம்பனிகளின் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்தும் நோக்குடன், மத்திய வங்கியானது கட்டமைப்பின் முக்கிய கூறுகள் மீது கவனம் செலுத்துமாறு கம்பனிகளை தேவைப்படுத்துகின்ற **திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு** மீதான பணிப்புரைகளை வெளியிட்டது

மேலும், வைப்புக்கள் பெறப்படும் போது மற்றும் படுகடன் சாதனங்கள் வழங்கப்படும் போது நிலைபெறத்தக்க வியாபார நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக, **வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான அதிகபட்ச வட்டி வீதங்கள்** பற்றிய பணிப்புரையொன்று வெளியிடப்பட்டது

மத்திய வங்கியானது, கொடுக்கல்வாங்கலொன்றிற்கான உயர்ந்தபட்சக் கட்டணத்தை குறைத்தல், கொடுக்கல்வாங்கலொன்றிற்கான உயர்ந்தபட்சப் பெறுமதியினை விரிவடையசெய்தல் மற்றும் பங்குடைமையினூடாக உலகளாவிய இணைப்பினை மேம்படுத்தல் உள்ளடங்கலாக **டிஜிட்டல் கொடுப்பனவுகளின் தழுவுதலை** ஊக்குவிப்பதற்கு பல்வேறு கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.

உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் ஆகிய இரண்டும் தரப்படுத்தப்பட்ட தீர்மான அமைப்பிற்கு உட்படுவதை உறுதி செய்வதனூடாக, வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 57ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றினூடாக அனைத்து நிதிக் கம்பனிகளுக்கும் **தீர்மான ஏற்பாடுகள் விரிவடைந்தது.**

# 2025 காலப்பகுதியில், நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்குந்தன்மைக்கும் உறுதிப்பாட்டிற்கும் ஆதரவளித்து, நாட்டின் நிதியியல் உட்கட்டமைப்பானது தொடர்ச்சியாக செயல்திறன்மிக்க வகையில் தொழிற்பட்டது

**டிஜிட்டல் கொடுப்பனவுகளின் வளர்ச்சி:** மரபுசார்ந்த கொடுப்பனவு முறைகளிலிருந்து மாறுதலடைதலொன்றை பிரதிபலித்து, டிஜிட்டல் கொடுப்பனவுகளின் பயன்பாடு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

**பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவித்தல்:** நிதியியல் உளவறிதல் பிரிவானது, பன்னாட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாத நிதியளித்தலை ஒழித்தல்/ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நியமங்களுடன் தொடர்ச்சியாக இணங்கியொழுகிய அதேவேளை, நிதியியல் துறையின் நேர்மையும் தாக்குப்பிடிக்கும்தன்மையும் பேணப்பட்டது.

**சட்ட மறுசீரமைப்புக்கள்:** நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்கு சட்ட மறுசீரமைப்பு முன்முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டது.

**நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு:** கொள்கை மற்றும் மேற்பார்வை முன்முயற்சிகளின் ஊடாக நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பானது தொடர்ந்தும் வலுப்படுத்தப்பட்டது.

**தீர்மானக் கட்டமைப்பு:** 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தீர்மானக் கட்டமைப்பானது தொடர்ந்து தொழிற்படுத்தப்பட்டு, வலுப்படுத்தப்பட்டது.

# இறைத் துறை அபிவிருத்திகள்

# வலுவான இறை ஒழுக்கமும் நீடித்துநிலைக்கும் மறுசீரமைப்புக்களும் இறைச் செயலாற்றத்தினை 2025இல் மேம்படுத்தின

**முதலாந்தர நிலுவை தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டிலும் குறிப்பிடத்தக்க மிகையினைப் பதிவுசெய்தது.**

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் %ஆக முதலாந்தர மிகை
2024: 2.2 (ரூ. 649.6 பில்.) ➡ **2025: 5.4 (ரூ.1,755.8 பில்.)**


**நடைமுறைக் கணக்கு நிலுவை மிகையொன்றினைப் பதிவுசெய்தது.**

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் %ஆக நடைமுறைக் கணக்கு நிலுவைகள்
2024: -4.3 (ரூ.1,309.1 பில்.) ➡ **2025: 0.7 (ரூ. 217.0 பில்.)**
1987 இலிருந்து முதற்தடவையாக

**ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை கணிசமாக குறுக்கமடைந்தது.**

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் %ஆக ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை
2024: 6.8 (ரூ.2,039.9 பில்.) ➡ **2025: 2.3 (ரூ. 744.9 பில்.)**

வரைபடம் 1.30
முக்கிய இறை மீதிகள்
(மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக)





*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**முதலாந்தர நிலுவை** = *அரசாங்க அரசிறை மற்றும் கொடைகள் – வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக அரசாங்க செலவினம்*
**நடைமுறைக் கணக்கு நிலுவை** = *அரசாங்க அரசிறை மற்றும் கொடைகள் – மீண்டெழும் செலவினம்*

# வலுவான வரிச் சேகரிப்பு மற்றும் சீர்த்திருத்தங்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, 2025இல் அரசிறை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது

வரைபடம் 1.31
அரசிறையின் உள்ளமைப்பு - 2025





*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

- அரசிறை மேம்படுத்தல் வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு, **2025இல்** அரசிறை **35.2 சதவீதம்** கொண்ட ஆண்டுக்காண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்து, **ரூ. 5,449.4 பில்லியனை** அடைந்த அதேவேளை, மொத்த உள்நாட்டு உற்பத்தி நியதிகளில் அரசிறை **2022இன் 8.2** சதவீதத்திலிருந்து **2025இல் 16.6 சதவீதமாக** குறிப்பிடத்தக்களவு உயர்வடைந்தது.
- உயர்வான வரி சேகரிப்பானது பிரதானமாக **வாகன இறக்குமதி தொடர்புபட்ட வரிகளிலிருந்து** சேகரிக்கப்பட்டது
- உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கம் என்பவற்றின் முயற்சிகளினால் **வரி மறுசீரமைப்புக்கள்** மேலும் வலுவூட்டப்பட்டன.
- கம்பனி மற்றும் கம்பனியல்லா உள்ளடங்கலாக பதிவுசெய்யப்பட்ட வருமானவரி செலுத்துநர்களின் எண்ணிக்கை, **அதிகரித்தன**

# முன்னெடுக்கப்படுகின்ற இறைத்திரட்டல் மற்றும் செலவின சீரமைப்பு என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, 2025இல் அரசாங்கச் செலவினம் மிதமடைந்தது

வரைபடம் 1.32
அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2025




மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

- அரசாங்கத்தின் மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2024 உடன் ஒப்பிடுகையில், **2025இல்** பெயரளவு நியதிகளில் **1.6 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது.**
- மீண்டெழும் செலவினம் 2024 உடன் ஒப்பிடுகையில் **2025இல் 2.0 சதவீதத்தினால்** வீழ்ச்சியடைந்தது.
- மீண்டெழும் செலவினத்தின் பாரிய கூறான வட்டிச் செலவினம் 2024 உடன் ஒப்பிடுகையில் **2025இல் 7.0 சதவீதத்தினால்** வீழ்ச்சியடைந்தது.
- மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் **2025இல் 26.2 சதவீத** குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினை பதிவுசெய்தது.

# மத்திய அரசாங்கப் படுகடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2024இன் 95.5 சதவீதத்திலிருந்து 2025 இறுதியளவில் 91.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்த அரசாங்கப் பிணையங்களின் **குறைவடைந்த தேறிய வழங்கல்கள்**
- ஐ.அ.டொலருக்கெதிராக உள்நாட்டு நாணயத்தின் தேய்வடைதல் 2025 காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்களுடன் ஒன்றிணைந்து 2025 காலப்பகுதியில் **வெளிநாட்டுப் படுகடன் அதிகரித்தது.**
- அநேகமான **வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைத்தல்** 2025 காலப்பகுதியில் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது.
- 2025 திசெம்பரில் உள்நாட்டுச் சந்தைக்கு **டொலர் பெயர்குறிக்கப்பட்ட முறிகள்** வழங்கப்பட்டது.

**அட்டவணை 1.21**
**மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (அ)(ஆ)**
**(ஆண்டிறுதி)**

ரூ. பில்லியன்

| விடயம் | 2024 | 2025 (இ) |
|---|---|---|
| உள்நாட்டு படுகடன் (ஈ) | 18,309.7 | 18,675.3 |
| முதிர்வு காலத்தின்படி | | |
| குறுங்காலம் (உ) | 3,220.1 | 2,134.4 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் (ஊ) | 15,089.6 | 16,540.9 |
| நிறுவனங்களின்படி (எ) | | |
| வங்கி (எ) | 9,411.2 | 9,183.5 |
| வங்கியல்லா (எ) | 8,158.5 | 8,490.8 |
| மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒதுக்கீடு (எ)(ஏ) | 739.9 | 1,001.1 |
| வெளிநாட்டு படுகடன் (ஐ)(ஒ) | 10,429.0 | 11,319.4 |
| பல்புடை | 3,773.5 | 4,374.0 |
| இருபுடை மற்றும் வர்த்தக | 6,655.6 | 6,945.4 |
| மொத்த மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் | 28,738.7 | 29,994.7 |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக (ஓ) | | |
| மொத்த மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் | 95.5 | 91.6 |
| உள்நாட்டு படுகடன் | 60.8 | 57.0 |
| வெளிநாட்டு படுகடன் | 34.7 | 34.6 |

*மூலங்கள்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி





# பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு

# உலகளாவிய பொருளாதார சூழலும் தோற்றப்பாடும்

2026 பெப்புரவரியின் பிந்திய பகுதியில் தொடங்கிய தற்போதைய **மத்திய கிழக்கு யுத்தம் தீவிரமடைந்ததன் காரணமாக** வர்த்தக கொள்கை மாறுதல்கள் மற்றும் அதிகரிக்கின்ற புவிசார்பொருளியல் பிரிவுறுதல் என்பவற்றுக்கு மத்தியிலும் உலகளாவிய பொருளாதாரத்தில் அண்மைக்காலத்தில் வெளிப்படுத்திய தாக்குப்பிடிக்கும் தன்மை **சவாலுக்குட்பட்டு வருகின்றது.**


தற்போதைய மத்திய கிழக்கு யுத்தம் தொடங்கியதன் பின்னர் **புதுப்பிக்கப்பட்ட புவிசார்அரசியல் பதற்றங்கள்,** யுத்தத்தின் தீவிரம் மற்றும் காலம் என்பவற்றைச் சார்ந்து **உலகளாவிய பொருளாதார நோக்குகளை** குறிப்பிடத்தக்களவில் பாதித்து, பல்வகை பரிமாணங்கள் முழுவதும் **உலகளாவிய நிச்சயமற்ற தன்மையினை தீவிரப்படுத்தக்கூடும்.**

மத்திய கிழக்கில் புவிசார்அரசியல் பதற்றங்கள் அதிகரிப்பதனால் **உலகளாவிய பணவீக்க வீழ்ச்சி போக்கு நிறுத்தப்பட்டு,** புதுப்பிக்கப்பட்ட பணவீக்க அழுத்தங்களுக்கு காரணமாகக்கூடும். இப்பின்னணிக்கெதிராக **2026 இல் உலக நாணயக் கொள்கை நிலை 2025இனை விடவும் குறிப்பாக** புவிசார்அரசியல் அபிவிருத்திகளை சூழ்ந்துள்ள நிச்சயமற்ற தன்மை தொடர்ந்து காணப்படின் மேலும் எச்சரிக்கை மிக்கதாக இருக்கக்கூடும்.

மத்திய கிழக்கில் புவிசார் அரசியல் பதற்றங்களின் தீவிரத்தன்மை, குறிப்பாக மோதலானது நீண்ட காலப் பகுதிக்கு நீடிக்குமாயின் **பல்வேறு வழிகளில் இலங்கைப் பொருளாதரத்தில் குறிப்பிடத்தக்களவான தாக்கங்களைக்** கொண்டிருக்கக்கூடும்

# பணவீக்கத் தோற்றப்பாடு மற்றும் வளர்ச்சி வாய்ப்புக்கள்


**அடிப்படைக் காலாண்டு முதன்மைப் பணவீக்க எதிர்வுகூறல் (கொ,நு.வி.சு அண்டிற்காண்டு, 2026 மாச்சினை அடிப்படையாகக் கொண்டது).**




*** மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சருக்கு இடையில் 2023 ஒத்தோபரில் கைச்சாத்திடப்பட்ட நாணயக் கொள்கை கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கு (5%) இணங்கிக்கொள்ளப்பட்டது.*

மூலம்: இலங்கை மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

**அடிப்படைக் காலாண்டு உண்மை மொ.உ.உற்பத்தியின் (கொ,நு.வி.சு அண்டிற்காண்டு, 2026 மாச்சினை அடிப்படையாகக் கொண்டது).**




மூலம்: இலங்கை மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

இங்கு தரப்பட்டிருக்கும் எறிவுகள் 2026 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற சுற்றின் முடிவில் கிடைப்பனவாக இருந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை. மத்திய கிழக்கில் நிலவும் நெருக்கடியின் நிலையற்றதன்மை அத்துடன் உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கை ஆகிய இரண்டிலும் அதன் பரந்த வீச்சிலான கசிவுத்தாக்கங்கள் போன்றவற்றுக்கு மத்தியில், தற்போதைய பணவீக்கத் தோற்றப்பாடு அதிகரித்த நிச்சயமற்றத்தன்மைக்குட்பட்டதாக காணப்படுகின்றது. இதற்கமைவாக, அடிப்படையான நிலைமைகளில் எவையேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இந்த எறிவுகளிலிருந்தான குறிப்பிடத்தக்க விலகல்களுக்கு வழிவகுக்கக்கூடும்.

# நாணயக் கொள்கைத் தோற்றப்பாடு

**நாணயக் கொள்கை தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையானது**, பரிணமித்துவரும் உள்நாட்டுப் பேரண்டப்பொருளாதார நிலைமைகள் மற்றும் உலகளாவிய **கொள்கை அதிர்வுகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகளிலிருந்தான சாத்தியமான கசிவுத் தாக்கங்களின்** உன்னிப்பான பரிசீலனையுடன் தரவினால் உந்தப்பட்டதாகவும் முன்னோக்கிய பார்வையில் அமைந்ததாகவும் காணப்படும்.

**மத்திய கிழக்கு போரிலிருந்து கசிவுத்தாக்கங்கள்** தோற்றப்பாட்டிற்குத் தாக்கம்செலுத்தக்கூடிய போதிலும் **தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி** உத்வேகம் தொடர வாய்ப்புள்ளது.

- ஆண்டின் பிற்பகுதியில் சிறிதளவிலான மெதுவடைதலுடன் ஒட்டுமொத்த கொடுகடன் வளர்ச்சி 2026இல் ஒப்பீட்டளவில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசிற்குச் சொந்தமான வியாபார தொழிற்முயற்சிகளின் மறுசீரமைப்பு உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்களுடன் இணைந்த இறைத் திரட்சியின் தொடர்ச்சியால் ஆதரவளிக்கப்பட்டு **வங்கித்தொழில் முறைமையினால் அரச துறைக்கான கொடுகடன் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

**உலகளாவிய மற்றும் உள்நாட்டு அதிர்வுகளை ஈடுகொடுப்பதற்கான** போதுமான நிதியியல் தாங்கியிருப்புக்களின் பேணுதலை அவசியப்படுத்தி, **வெளிநாட்டு நிதியளித்தலுக்கான வரையறுக்கப்பட்ட அணுகலுக்கு மத்தியில்** உள்நாட்டு நிதியளித்தல் தெரிவுகளின் மீது அரசாங்கமானது பெரிதளவில் தங்கியிருக்கக்கூடும்.

**மத்திய வங்கி** பல்வேறு வழிகளினூடாக **அதன் கொள்கைத் தீர்மானத்தை உடனடியாக தொடர்ந்தும்** பொதுமக்களுக்கு தொடர்பூட்டுவது மட்டுமல்லாமல், அதன் செய்திகளின் **செயற்றிறனையும் பொதுமக்கள் புரிந்துகொள்ளுந்தன்மையினையும் மதிப்பீடு செய்யும்**.

# வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு

இறக்குமதி வளர்ச்சி ஏற்றுமதிகளை விஞ்சியமையினால் **வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை 2026இல் விரிவடையுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது** இருந்தும் அண்மைய காலம் தொடக்கம் நடுத்தரகாலத்தில் **நிலைபேறான மட்டங்களில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

**பணிகள் கணக்கு** நடுத்தர காலத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**முதலாந்தர வருமானக் கணக்கு,** வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைத்தலின் பின்னர் குறைவடைந்த வட்டிக் கொடுப்பனவுகளை பெருமளவில் பிரதிபலித்து **2026இல் குறுக்கமடையுமென எதிர்வுகூறப்படுகின்றது.**

**இரண்டாந்தர வருமானக் கணக்கில்,** அண்மைய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்த தொழிலாளர் பணவனுப்பல்கள் அண்மையகாலம் தொடக்கம் நடுத்தரகாலத்தில் **குறைந்த மிதமான வளர்ச்சியைப் பேணுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

மேற்குறித்த அபிவிருத்திகளுடன் நடைமுறைக் கணக்கு தொடர்ச்சியாக மூன்று ஆண்டு மிகைகளின் பின்னர் **இலங்கையின் நடைமுறைக் கணக்கு முன்னோக்கிச் செல்கையில் நிலைபெறத்தக்க மட்டங்களில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்கின்றமையிலிருந்தான முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் படுகடன் மறுசீரமைப்பு நிறைவடைதல் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு **நிதியியல் கணக்கு 2026 இலும் நடுத்தர காலத்திலும் தொடர்ச்சியான உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

**சந்தை நிர்ணயித்த செலாவணி வீதத்தைப் பேணுதலும் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புதலும்** வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டிற்கு **இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.**

இக்காரணிகள் நடுத்தரகாலத்தில் வெளிநாட்டுத் துறை தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் சாத்தியமான பாதகமான விளைவுகளைத் தணிப்பதற்கு போதிய தாங்கியிருப்புகளைக் கட்டியெழுப்புவதையும் உரியகால அத்துடன் நன்கு இலக்கிடப்பட்ட கொள்கை இடைத்தலையீடுகளையும் அவசியப்படுத்தக்கூடிய பரிணமிக்கின்ற உலகளாவிய மாற்றங்கள் மீது வெளிநாட்டுத் துறை தோற்றப்பாடு ஐயமிக்கதாகக் காணப்படும்.

# நிதியியல் துறைத் தோற்றப்பாடு

புவிசார் அரசியல் பதற்றங்களுடன் தொடர்புடைய அதிகரித்துவரும் உலகளாவிய நிச்சயமற்றதன்மைகளுக்கிடையேயும் **உறுதியான மூலதன தாங்கியிருப்புக்கள்** அத்துடன் **வலுவான கொடுகடன் வளர்ச்சி** மற்றும் **மேம்பட்ட சொத்துத் தரம்** என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு **நிதியியல் துறையானது உறுதித்தன்மைவாய்ந்ததாக** காணப்படுகின்றது.

நிதியியல் உறுதிப்பாட்டிற்கான, சாத்தியமான சமநிலையற்ற நிலைமைகள் மற்றும் கட்டியெழுப்பப்படக்கூடிய அதிகரித்த இடர்நேர்வுகள் என்பவற்றின் ஆரம்ப அறிகுறிகளை கண்டறிவதற்கு மத்திய வங்கியானது **தொடர்ந்தும் உன்னிப்பாக கண்காணிப்பதுடன்** விழிப்புடன் இருக்கும்.

2025 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையினதும் நிதிக் கம்பனிகள் துறையினதும் சொத்துத் தரம் மேம்பட்ட போதிலும் டித்வா புயலின் தாக்கத்தின் பின்னர் **அறவீடுகளில்** சாத்தியமான **தாமதங்கள்** மற்றும் **அதிகரித்த பெறுமதியிழப்புத் தேவைப்பாடுகளினாலும்** அதேபோன்று மத்திய கிழக்கில் இடம்பெறும் யுத்தத்தின் கசிவுகளிலிருந்து உருவாகும் வீட்டலகு மற்றும் நிறுவனங்களின் மீள்கொடுப்பனவு இயலளவின் மீதான சாத்தியமான அழுத்தங்கள் என்பவற்றின் தாக்கங்களினால் இத்துறைகளில் கொடுகடன் தரம் **அதிகரித்த கீழ்நோக்கிய இடர்நேர்வுகளுக்குட்படும்.**

**சட்ட மற்றும் கொள்கை முயற்சிகளின்** பரந்தளவிலான தொகுதி நிதியியல் உறுதிப்பாட்டினை வலுப்படுத்திப் பாதுகாப்பதற்கு தொடர்ந்தும் முன்னேற்றப்படும்.

# இறைத் துறைத் தோற்றப்பாடு

**முன்மதிமிக்க இறை முகாமைத்துவம் மற்றும் அரசிறை அடிப்படையிலமைந்த இறைத் திரட்டல்** வழிமுறைகள் என்பவற்றுக்கு அரசாங்கம் உறுதிபூண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2026 இற்காகத் திட்டமிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க **உள்நாட்டரசிறைச் சட்டத்திற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள்** அரசிறைத் திரட்டலை மேலும் வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்க நிறுவனங்கள் முழுவதும் டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் தொழில்நுட்பவியல் ஒருங்கிணைப்பு மீதான மிகுந்த வலியுறுத்தலுடன் **நிறுவனசார் மறுசீரமைப்புக்கள், அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளில் கட்டமைப்புசார்ந்த மறுசீரமைப்புக்கள்** மற்றும் அரசாங்கத் துறை வினைத்திறனில் மேம்படுத்தல்கள்.

**இறைத் துறை தோற்றப்பாடு** பரிணமிக்கின்ற உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சூழலிலிருந்து தோற்றம்பெறுகின்ற பல கீழ்நோக்கிய இடர்நேர்வுகளுக்கு உட்பட்டு **காணப்படுகின்றது.**

# இலங்கையில் அண்மைக்கால பொருளாதார அதிர்வுகள்: நிச்சயமின்மை புதிய வாழ்க்கை முறையாகும்

## அண்மைக் காலத்தில் இலங்கைப் பொருளாதாரம் எதிர்கொண்ட பிரதான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு குழப்பங்கள் (அதிர்வுகள்)




**வெளிநாட்டு அதிர்வுகள்**

- 2011-12- உலகளாவிய எண்ணெய் விலை உயர்வு - ஐரோப்பிய பிராந்தியத்தில் தீவிரமடைந்த அரச கடன் நெருக்கடி, மற்றும் எண்ணெய் உற்பத்தி செய்யும் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்ட புவிசார் அரசியல் உறுதியின்மை.
- 2020-21- கொவிட் - 19 உலகளாவிய பெருந்தொற்று நோயும், நீண்டகால ஊரடங்குகளும் அதில் பயணிகள் போக்குவரத்திற்கான விமான நிலையங்களும் கடல் துறைமுகங்களும் மூடப்பட்டதும் பல முக்கிய பொருளாதாரத் துறைகளை பாதித்தது.
- 2025 - ஐக்கிய அமெரிக்க தீர்வைகளின் திருத்தங்களால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மைகள்
- 2026 கா1- ஐக்கிய அமெரிக்க - இஸ்ரேல் - ஈரான் போர் மற்றும் உலக அரசியல் பதற்றம் என்பன உலக வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலியில் பாரிய நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியுள்ளது.

**உள்நாட்டு அதிர்வுகள்**

- 2016- பாரிய வெள்ளம் மற்றும் நிலச்சரிவு
- 2017- 2016 இலிருந்து நீடித்த வரண்ட காலநிலை நிலைமைகள்
- 2018- அரசியல் உறுதியின்மை
- 2019- உயிர்த்த ஞாயிறு தாக்குதல் - சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டது.
- 2022-23- பொருளாதார நெருக்கடி பொதுமக்கள் பதற்றத்தையும் அரசியல் குழப்பத்தையும் ஏற்படுத்தியது.
- 2025- டித்வா புயலினால் ஏற்பட்ட வானிலை சார்ந்த இடையூறுகள்.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.

- **பொருளாதார அதிர்வுகளின் அதிகரிக்கின்ற நிகழும் தன்மையும் தீவிரமும் நிச்சயமின்மையை அதிகரித்து** வளர்ச்சி, கொள்கை செயல்திறன் தன்மை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் இயலளவு என்பவற்றைப் பலவீனப்படுத்தியுள்ளன.
- **போதுமான அத்துடன் வினைத்திறன் மிக்க இறை மற்றும் வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களைக் கட்டியெழுப்புதல், நெருக்கடித் தயார்நிலை மற்றும் பாதுகாப்பு வலையமைப்பு என்பன** பொருளாதாரத் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவதற்கும் பாதிக்கப்படத்தக்க சமூகங்களைப் பாதுகாப்பதற்கும் **அத்தியாவசியமானவையாகும்.**

# முடிவுரைக் குறிப்புக்கள்

முன்னோக்கிப் பார்க்கையில், வளர்ச்சி உத்வேகத்தினைத் தக்கவைத்தலானது பொருளாதாரப் **பன்முகப்படுத்தலை வலுப்படுத்தல், போட்டித்தன்மையை அதிகரித்தல் மற்றும் உற்பத்தித்திறனை உயர்த்துதல் என்பன மீது முக்கியமாக** தங்கியிருக்கும். அதிகரித்தளவிலான தளம்பல்மிக்கதும் அதிர்வுகளுக்குள்ளாகக்கூடிய சூழலில், சரியான நேரத்திலான, நன்கு வடிவமைக்கப்பட்டதும் நம்பகமிக்க கொள்கைசார் நடவடிக்கைகளுடன் **பதிலிறுத்துவதற்கான இயலுமையானது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கும் தாக்குப்பிடிக்கும்தன்மை, அனைவரையுமுள்ளடக்கிய, மற்றும் இலங்கைக்கான நிலைபெறத்தக்க வளர்ச்சிப் பாதை போன்றவற்றிற்கு மையமாகக் காணப்படும்.**

# சிறப்பு வரைபடங்களின் அட்டவணை


I. பணிகள் மற்றும் பணிகள் அல்லாதவற்றின் பணவீக்க இயக்கவாற்றல்கள்

II. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கூறுகளுக்கிடையிலான விலை அழுத்தங்களின் பகிர்ந்தளிப்பு

III. சூரிய வலு உற்பத்தியின் விரிவாக்கம்

IV. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தனியார் துறைக் கொடுகடனின் தவணைவாரியிலான பரம்பல்

V. உள்நாட்டுக் கொடுகடன் மீள்சமநிலைப்படுத்தல்: அரச எதிர் தனியார் துறை இயக்கவாற்றல்கள்.

VI. எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம்

VII. மோட்டார் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தலும் இறக்குமதிப் போக்குகளும்

VIII. சுற்றுலாத் துறையிடமிருந்தான இலங்கையின் வருவாய்கள்

IX. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் முன்னேற்றம்

X. முக்கியக் குறிகாட்டிகளில் பிரதிபலித்த மேம்பட்டுவரும் இறைச் செயலாற்றம்

XI. இலங்கையில் அண்மைய பொருளாதார அதிகர்வுகள்: நிச்சயமற்றதன்மையே புதிய வாழ்க்கை முறையாகும்.


1

4

# சிறப்புக் குறிப்புகளின் அட்டவணை

அத்தியாயம்

1

I. இலங்கையின் அண்மைய கால பணச்சுருக்க நிகழ்வு

II. ஊழியர் சேமலாப நிதியத்தின் அடிப்படையிலான முறைசார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணினைப் பயன்படுத்தித் தனியார் துறைக் கூலி இயக்கவாற்றல்களில் உள்ள தரவு சார்ந்த இடைவெளிகளினை நிவர்த்திசெய்தல்

2

III. வங்கித்தொழில் துறையில் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் உறுதிப்பாட்டையும் ஊக்குவிப்பதற்காக வங்கித்தொழில் துறையை ஒருங்கிணைத்தல்

3

IV. இலங்கையில் நாணய மற்றும் இறைக் கொள்கை ஒருங்கிணைப்பு

V. இலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் விலை கண்டறிதல் பொறிமுறையை வலுப்படுத்துதல்

2025ஆண்டிற்கான முழுமையான பொருளாதார மீளாய்வு அறிக்கைக்கும் இணையவழி தரவு இணைப்புகளுக்கும் கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்

# நன்றி